முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் தை மாதம் 07 திகதி முதல் சோபகிருது வருடம் தை மாதம் 14 திகதி வரை (21.01.2024 ஞாயிறு முதல் 28.01.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதாரம் கலியினில் புரிந்து
   ஆறுமுகனார் வழிபாடுதனை
   அவசியமாக்கி அருளும் ஞானியே
   அரங்கனே உமைபோற்றி இனிதே
2. இனிதே சோபகிருது கலைதிங்கள்
   இருமூன்றோர் திகதிமேல் முன்னான்கீர் திகதிவரை
   கனிவுடன் இந்தியா தமிழகம்தன்னில்
   கண்டுரைப்பேன் வார நிகழ்வாக
3. நிகழ்வாக வருங்கால பலன்குறித்த ஆசி
   நிலமதனில் அகத்திய மகரிஷி யானும்
   வகைபட வார ஆசியாக உரைப்பேன்
   வல்லமைமிக்க ஞானிகள் பூசை
4. பூசைமுறை மக்களிடை உருவாகி
   புண்ணிய பலமாம் அன்னதான
   நேசக்கரங்கள் கொண்ட படை
   நிலமதனில் பெருகி இனிதே
5. இனிதே காத்தருளும் வண்ணம்
   இயற்கை சீற்றம் பேரிடர் என
   கனிவிலா அல்லல் மிகுந்தாலும்
   காப்பாக மனித சக்திகள் மாறி
6. மாறியே இந்தியா தமிழகம் தன்னில்
   மாற்றங்கள் தரும வழிகளாக
   ஆறுதலாக ஆளுமைகளும் உணர
   அதிசயம் பல நடக்க நேரும்

7. நேருமையான வழிமுறைகள்தனை
நிலமதனில் இனியேனும் ஆளுமைகள்
வருங்கால வெற்றிக்காகவும்
வளர்ச்சிக்காகவும் ஆனவண்ணம்
8. வண்ணமுடன் ஏற்று நடக்க
வருகின்ற அவரவர்க்கானதொரு
எண்ணம் வழி நன்மை கூடி
எல்லாம் பாதுகாப்பாக மாறும்
9. மாறுதலை செய்ய வந்த ஞானி
மாதவசி அரங்கன் அவதாரம்
ஆறுதலாய் இந்தியா தமிழக
ஆளுமைகள் அறிந்து அணுகி
10. அணுகி ஆசிபலம் பெற
ஆபத்தான சூழல்கள் விலகி
ஞானமுள ஆட்சிக் காலமாக
நல்கியே அற்புதம் காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் தை மாதம் 07ம் நாள் 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 14ம் நாள் 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

மாமாயை சூழ்ந்த கலியுகத்தினை மீட்க கலியுக அவதாரமாக முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அரங்க மகானாய் அவதரித்து உலகினில் முருகப்பெருமான் வழிபாட்டினை மக்களுக்கு உபதேசித்து அருளி காக்கும் மகா ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை போற்றியே சோபகிருது வருடம் தை மாதம் 07ம் நாள் 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 14ம் நாள் 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலகினில் இனிவரும் காலம் ஞானிகள் பூசைகள் அதிகமாகும் ஞானிகள் பூசைகள் அதிகமாகி புண்ணிய செயல்களை, அன்னதானத்தினை மக்கள் அதிகமாக செய்து புண்ணிய பலம் பெருகி தர்மவான்கள் அதிகமாகி இயற்கை பேரிடர்கள் எல்லாம் மனிதர்கள் செய்யும் புண்ணிய பலத்தாலே மாற நேரும். ஆட்சி புரிவோர் தர்ம வழிகளிலே நடந்திட தேசத்திலே பலப்பல அதிசயங்கள் நடக்குமப்பா.

ஆதலினாலே ஆட்சி புரிவோர் இனிமேலாயினும் நேர்மையான வழிமுறைகளிலே நடந்திடவும் வருங்கால வெற்றிக்காகவேனும், அவரவர் வளர்ச்சிக்காகவேனும் தர்ம நெறிகளை ஏற்று நடந்திட அவரவரின் எண்ணங்கள் நிறைவேறி நன்மைகள் நடந்தேறும். அவர்களது மாறிய தூய எண்ணங்களினாலே நன்மைகள் நாட்டினில் பெருகி எல்லாம் பாதுகாப்பாக மாறிடுமப்பா.

இவ்வுலகினில் தர்மத்தின் மூலமாக மாற்றங்களை செய்திடவே அவதரித்த மகா ஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனாரின் அவதார நோக்கத்தை ஆட்சி புரிவோர் உணர்ந்து அணுகி உபதேசம் பெற நாட்டைப் பற்றியுள்ள ஆபத்தான சூழல்கள் எல்லாம் விலகி தர்மபலம் பெருகி ஞானம் மிக்க ஆட்சியாக மாறி தேசமே தர்மத்தின் வழியில் அற்புதங்களை காணுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–